I have read the official report of the proceedings and also this newspaper. I have no doubt that the caption is incorrect in the sense that it is not in accordance with the official report of the proceedings. Therefore I am bound to hold that a *prima facie* case of breach of privilege has been made out. But newspaper Editors particularly Editors of dailies have to carry on their profession under great stress and pressure for time and sometimes it might so happen that they do not choose the right words for headlines although they have no malice against anyone. Therefore I propose to write to the Editor concerned and deal further under Rule 189 after receiving his reply, if any.

(iii) 'நவசக்தி' நாளிதழ் ஒருறுப்பினர் பேச்சுப் பற்றி வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கொ. இர. ஞானசம்பந்தன் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் ஜனவரி 30-ம் தேதிய நவசக்தி நாளிதழில் எ. பாலசுப்பிரமணியன் (இடது கம்யூனிஸ்டு), "நான் எதிர்க் கட்சித் தலைவனில்லையா?" என்று 28—3—1968 சட்டப் பேரவைக் கூட்டத்தில் பேசியதுமாதிரிப் பிரசுரித்திருக்கிறார்கள். 28—3—1968-ம் தேதி நடந்த சட்டப்பேரவையின் நடவடிக்கைகளை இது வேண்டுமென்றே திருத்திக் கூறியுள்ளது. இது சபை உரிமையை மீறியதாகும். எனவே இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன். இத்துடன் 30—3—1968 'நவசக்தி' நாளிதழை இணைத்துள்ளேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அவர்கள் சொல்லியுள்ளபடி இதில் வந்திருக்கும்படியான இந்தச் செய்தியானது நமது நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து வேறுபட்டிருக்குமானால், அது அவையின் உரிமைக் குழுவுக்குப் போகவேண்டிய ஒன்றாக இருக்க முடியும். நான் இன்னும் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்க்கவில்லை. அதில் அப்படி இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து, பின்னால் தீர்ப்புக் கூறுவதற்காக இதைத் தள்ளி வைக்கிறேன்.

(iv) அவதூறான செய்தியைத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் பிரசுரம் செய்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சுரேந்திரன் அவர்கள், ஒரு அவதூறான செய்தியைப் பிரசுரம் செய்ததாக ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்து, சபையின் உரிமை பாதிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதில் என்னைப்பற்றியும் கூறப்பட்டிருப்பதால் நான் அதுபற்றித் தீர்ப்புச் சொல்வது முறையாகாது. பின்னால் ஒரு நாள் பேரவைத் துணைத் தலைவர் அதன்மீது தீர்ப்புச் சொல்வதற்காக நான் இதைத் தள்ளி வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.